**செய்தி வெளியீடு எண்: 439** **நாள்: 19.07.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**நிதி (வழிவகைகள்–II )த் துறை,**

**செய்தி வெளியீடு, நாள் ஜுலை 19, 2019**

மொத்தம் **ரூபாய் 1000.00 கோடி** மதிப்பிற்கு பங்குகள் வடிவிலான **6.97%** தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் **2039** ஏலத்தின் மூலம் மறுவெளியீடு செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் **ஜுலை 23, 2019** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.00 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **ஜுலை 23, 2019** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை–9.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**